# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

| | | | |
|---|---|---|---|
| **வினாக்கள்** | **: 1–100** | **மொத்த மதிப்பெண்கள்** | **: 150** |
| **Questions** | **: 1–100** | **Total Marks** | **: 150** |

1. ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச் சொல்லை அறிதல்

   APP (ஆப்) என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல்

   (A) தேடு பொறி
   (B) புலனம்
   (C) செயலி
   (D) வலஞ்சுழி
   (E) விடை தெரியவில்லை

2. ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச் சொல்லை அறிதல்.

   TOUCH SCREEN (டச் ஸ்கிரீன்) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச் சொல்

   (A) குரல் தேடல்
   (B) தொடு திரை
   (C) தேடு பொறி
   (D) புலனம்
   (E) விடை தெரியவில்லை

3. ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச் சொல்லை அறிதல்.

   WHATSAPP (வாட்ஸ் ஆப்) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச்சொல்

   (A) புலனம்
   (B) வலஞ்சுழி
   (C) தேடு பொறி
   (D) செயலி
   (E) விடை தெரியவில்லை

4. விடை வகையைக் கண்டறிக.
'இப்பக்கத்தில் உள்ளது'

(A) ஏவல் விடை
(B) நேர் விடை
(C) மறை விடை
(D) சுட்டு விடை
(E) விடை தெரியவில்லை

5. விடை வகையைத் தெரிவு செய் :
ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா? என்று நூலகரிடம் வினவும் போது சுஜாதாவின் சிறுகதைகள் இருக்கிறது என்று நூலகர் கூறுவது

(A) இனமொழி விடை
(B) நேர் விடை
(C) ஏவல் விடை
(D) உறுவது கூறல்
(E) விடை தெரியவில்லை

6. அலுவல் சார்ந்த சொற்கள் :
சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Epigraphy – கல்வெட்டியல்
(B) Cave Temple – குடைவரைக் கோயில்
(C) Treasury – கருவூலம்
(D) Hero Stone – நடுகல்
(E) விடை தெரியவில்லை

7. சரியான இணையைத் தேர்ந்தெடு
(அலுவல் சார்ந்த சொற்கள்)

(A) Cultural Values – பண்பாட்டு விழுமியங்கள்

(B) Cabinet – அமைச்சரவை

(C) Humanism – மனிதநேயம்

(D) Belief – நம்பிக்கை

(E) விடை தெரியவில்லை

8. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச் சொல்)
கலைச்சொல் அறிதல்:

NAUTICAL MILE என்ற சொல்லுக்கு இணையான கலைச்சொல் தேர்க

(A) ஏவுகணை
(B) ஏவு ஊர்தி
(C) கடல் மைல்
(D) மின்னணுக் கருவிகள்
(E) விடை தெரியவில்லை

9. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்
உடலும் உயிரும் போல

(A) பரந்த புகழ்
(B) ஒற்றுமையின்மை
(C) எதிர்பாரா நிகழ்வு
(D) மனமொன்றிய துணை
(E) விடை தெரியவில்லை

10. 15 உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளை தேர்ந்தெடுத்தல் சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) உள்ளங்கை நெல்லிக்கனிபோல – ஒற்றுமையின்மை

(B) மடைதிறந்த வெள்ளம் போல் – தடையின்றி மிகுதியாக

(C) விழலுக்கு இறைத்த நீர்போல – வெளிப்படைத் தன்மை

(D) நெல்லிக்காய் மூட்டை கொட்டினாற் போல் – பயனற்ற செயல்

(E) விடை தெரியவில்லை

11. எவ்வகை வாக்கியம் கண்டறிக
கடிதம் கவிதாவால் படிக்கப்பட்டது

(A) தன் வினை

(B) பிற வினை

(C) செயப்பாட்டு வினை

(D) செய்வினை

(E) விடை தெரியவில்லை

12. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்
பிறவினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க:

(A) மாணவன் பள்ளிக்கு புறப்பட்டுச் சென்றான்

(B) பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார்

(C) பாட்டு பாட மாணவிகள் கூட்டமாக வந்தனர்

(D) அவர்கள் நன்றாகப் படித்தனர்

(E) விடை தெரியவில்லை

13. தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க:

(A) அவனைத் திருந்தச் செய்தான்

(B) அவன் திருந்தினான்

(C) அவர்கள் படிக்க வரவழைக்கப்பட்டனர்

(D) பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார்

(E) விடை தெரியவில்லை

14. விடைக்கேற்ற வினா அமைக்க.
பொழுது – பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்

(A) பொழுது என்றால் என்ன?

(B) பொழுதின் வேறு பெயர்கள் யாவை?

(C) பொழுது எத்தனை வகைப்படும்?

(D) பொழுது – விளக்குக

(E) விடை தெரியவில்லை

15. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையை நாட்டுப் புறப்பாடல் கூறுகிறது

(A) நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையை எந்தப் பாடல் கூறுகிறது?

(B) உபசரிப்பு என்றால் என்ன?

(C) நாட்டுப் புறப்பாடல் கூறுவது சரியா?

(D) உபசரிப்பு பாடல் கூறுவது யாது?

(E) விடை தெரியவில்லை

16. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

காணும் பொங்கல் அன்று உற்றார்–உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர்

(A) காணும் பொங்கல் என்றால் என்ன?

(B) காணும் பொங்கல் அன்று எங்கு சென்று மகிழ்வர்?

(C) யாரைக் கண்டு மகிழ்வர்?

(D) காணும் பொங்கல் அன்று உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டிற்குச் சென்று என்ன செய்வர்?

(E) விடை தெரியவில்லை

17. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்

கலைத்தல் – களைத்தல்

(A) ஓட்டுதல்–சேர்தல்

(B) பிரித்தல்–காணுதல்

(C) அழித்தல்–சோர்தல்

(D) குலைத்தல்–காணுதல்

(E) விடை தெரியவில்லை

18. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்

பணித்து, பணிந்து

(A) தலைவர் தொண்டர்களை பணிந்தார், தொண்டர்கள் தலைவருக்கு பணித்தனர்.

(B) தலைவர் தொண்டர்களை வேலை செய்ய பணித்தார். தொண்டர்கள் தலைவருக்குப் பணிந்தனர்.

(C) தலைவர் பணிந்து நின்றார் தொண்டர்களும் பணிந்து நின்றனர்

(D) தொண்டர்கள் பணித்தனர். தலைவர் தொண்டர்களிடம் பணிந்து நடந்தார்

(E) விடை தெரியவில்லை

19. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

(A) இன்றைய சூழலில் கவசங்கள் இல்லை. வெப்பத்தைத் தாங்கும் அளவுக்கு

(B) கவசங்கள் தாங்கும் அளவுக்கு வெப்பத்தைத் இன்றைய சூழலில் இல்லை

(C) வெப்பத்தைத் தாங்கும் அளவுக்கு இன்றைய சூழலில் கவசங்கள் இல்லை

(D) தாங்கும் அளவுக்கு இன்றைய வெப்பத்தைத் சூழலில் கவசங்கள் இல்லை

(E) விடை தெரியவில்லை

20. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

(A) மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும்

(B) அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் கல்வியாக ஆக்குவதன் மூலம் மொழி பெயர்ப்பைக் பெற முடியும்

(C) கல்வியாக பெற மொழி பெயர்ப்பைக் ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் முடியும்

(D) நாம் எளிதாகப் பெற முடியும் மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும்

(E) விடை தெரியவில்லை

21. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க

(A) பீர்க்கம், பாட்டு, பட்டு, பிட்டு

(B) பிட்டு, பட்டு, பாட்டு, பீர்க்கம்

(C) பட்டு, பாட்டு, பிட்டு, பீர்க்கம்

(D) பாட்டு, பட்டு, பீர்க்கம், பிட்டு

(E) விடை தெரியவில்லை

22. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க

(A) புளி, பூனை, பெட்டி, பேரன்

(B) பேரன், பெட்டி, பூனை, புளி

(C) பூனை, புளி, பேரன், பெட்டி

(D) பெட்டி, பேரன், புளி, பூனை

(E) விடை தெரியவில்லை

23. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

மையல், மௌவல், மேடு, மெல்ல, மொட்டு, மோர்

(A) மொட்டு, மோர், மௌவல், மெல்ல, மேடு, மையல்

(B) மெல்ல, மொட்டு, மேடு, மோர், மையல், மௌவல்

(C) மெல்ல, மேடு, மையல், மொட்டு, மோர், மௌவல்

(D) மேடு, மோர், மெல்ல, மொட்டு, மௌவல், மையல்

(E) விடை தெரியவில்லை

24. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க - 'உணர்'

(A) உணர்ந்து

(B) உணர்ந்த

(C) உணர்ந்தோர்

(D) உணர்ந்தான்

(E) விடை தெரியவில்லை

25. வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க.

'முளை'

(A) முளைத்தவன்

(B) முளைத்து

(C) முளைத்த

(D) முளைத்தல்

(E) விடை தெரியவில்லை

26. வேர்ச்சொல்லின் எதிர்மறைத் தொழிற்பெயரைக் காண்க.

உரை

(A) உரைக்கின்றார்

(B) உரையாமை

(C) உரைத்த

(D) உரைப்பவர்

(E) விடை தெரியவில்லை

27. கொடுத்தோர் - வேர்ச்சொல்லைக் கண்டறி

(A) கொடுத்து
(B) கொடுத்த
(C) கொடு
(D) கொடுத்தார்
(E) விடை தெரியவில்லை

28. போவாள் - வேர்ச் சொல்லை கண்டறிக

(A) போ
(B) போகின்றாள்
(C) போகின்ற
(D) போது
(E) விடை தெரியவில்லை

29. நடப்பேன் - வேர்ச் சொல்லைக் கண்டறி

(A) நடந்தான்
(B) நாடு
(C) நட
(D) நாடா
(E) விடை தெரியவில்லை

30. 'சொல்லுதல்' - என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க

(A) செப்புதல்
(B) இயம்பல்
(C) துய்த்தல்
(D) விளம்புதல்
(E) விடை தெரியவில்லை

31. ஒரு பொருள் தரும் பல சொற்கள்:

மாதங்கம், வாரணம், களிறு என்ற சொற்கள் தரும் ஒரே பொருள் தேர்க.

(A) தங்கம்
(B) ஆபரணம்
(C) யானை
(D) கடல்
(E) விடை தெரியவில்லை

32. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு.

தோட்டத்தில் மேயுது ————————ப் பசு.

(A) வெள்லை
(B) வெள்ளை
(C) வெல்லை
(D) வெல்ளை
(E) விடை தெரியவில்லை

33. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு.

வீட்டுக்கு ———————— அடித்தான்.

(A) வெள்ளை
(B) வெல்ளை
(C) வெல்லை
(D) வெள்லை
(E) விடை தெரியவில்லை

34. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

LITERATURE

(A) இலக்கணம்
(B) இலக்கியம்
(C) பக்தி இலக்கியம்
(D) இதிகாசங்கள்
(E) விடை தெரியவில்லை

35. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

'Cosmic rays'

(A) விண்வெளிக் கதிர்கள்
(B) அகச்சிவப்புக் கதிர்கள்
(C) புற ஊதாக் கதிர்கள்
(D) உயிரித் தொழில்நுட்பம்
(E) விடை தெரியவில்லை

36. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

கம்யூனிசம் (Communism) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(A) ஒப்புரவு நெறி

(B) பொதுவுடைமை

(C) கடமை

(D) தானியங்கி

(E) விடை தெரியவில்லை

37. பிழைதிருத்தம்

சந்தி பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால் நிகழ்காலத்தைச் செம்மை படுத்திக் கொள்ளலாம்.

(B) காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால் நிகழ்காலத்தைச் செம்மை படுத்தி கொள்ளலாம்

(C) காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால் நிகழ்காலத்தை செம்மை படுத்திக் கொள்ளலாம்

(D) காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால் நிகழ்காலத்தை செம்மை படுத்தி கொள்ளலாம்

(E) விடை தெரியவில்லை

38. ஒலி மரபுச் சொல்லைக் கண்டறிக

கூகை ——————

(A) கூவும்

(B) குழறும்

(C) அகவும்

(D) குனுகும்

(E) விடை தெரியவில்லை

39. மரபுப் பிழைகள் - (ஒலி மரபு)

(குனுகும்) என்ற ஒலி மரபுச் சொல்லுக்கு உரிய பறவை எது?

(A) குயில்

(B) கூகை

(C) மயில்

(D) புறா

(E) விடை தெரியவில்லை

40. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

சொல்லின் பொருளறிந்து பொருந்தாச் சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

(A) கான்

(B) வல்லை

(C) நச்சரவம்

(D) அரண்

(E) விடை தெரியவில்லை

41. பொருந்தாத சொல்லைக் கண்டறிக

(A) வல்லினம்

(B) தோன்றல்

(C) திரிதல்

(D) கெடுதல்

(E) விடை தெரியவில்லை

42. பொருந்தாத சொல்லைக் கண்டறிக

(A) கேரளா

(B) இலங்கை

(C) ஆந்திரா

(D) கர்நாடகம்

(E) விடை தெரியவில்லை

43. சிறுவன் எதிர் பாலினத்தைக் குறிக்கும் சொல் எது?

(A) மகளிர்
(B) சிறுமி
(C) பெண்
(D) தோழி
(E) விடை தெரியவில்லை

44. தோழி எதிர் பாலினம் குறிக்கும் சொல் எது?

(A) நண்பன்
(B) மாணவன்
(C) தோழன்
(D) அரசன்
(E) விடை தெரியவில்லை

45. எதிர்ச்சொல்லை கண்டறிக:

மேலவர்

(A) மேலானவர்
(B) எளியர்
(C) கீழவர்
(D) வறியர்
(E) விடை தெரியவில்லை

46. பிரித்தெழுதுக:

மாசற

(A) மாச + அற
(B) மாசு + அற
(C) மா + சற
(D) மாசு + உற
(E) விடை தெரியவில்லை

47. சேர்த்தெழுதுக:

தம் + உயிர் என்பதனை சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல்

(A) தம்முயிர்
(B) தமதுஉயிர்
(C) தம்முஉயிர்
(D) தம்உயிர்
(E) விடை தெரியவில்லை

48. சேர்த்தெழுதுக:

அடிக்கும் + அலை என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல்

(A) அடிக்குமலை
(B) அடிக்கும் அலை
(C) அடியலை
(D) அடிக்கிலை
(E) விடை தெரியவில்லை

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர். கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

49. கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரத்தின் பெயர் தேர்க.

(A) பருமல்
(B) வங்கு
(C) கூம்பு
(D) எரா
(E) விடை தெரியவில்லை

50. கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவியைத் தேர்க.

(A) பருமல்
(B) எரா
(C) சுக்கான்
(D) கூம்பு
(E) விடை தெரியவில்லை

51. கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு

(A) சுக்கான்
(B) பருமல்
(C) நங்கூரம்
(D) கூம்பு
(E) விடை தெரியவில்லை

52. கப்பலின் குறுக்கு மரத்தின் பெயர்

(A) வங்கு
(B) பருமல்
(C) நங்கூரம்
(D) சுக்கான்
(E) விடை தெரியவில்லை

53. கப்பல்களில் பயன்படுத்தும் ஒரு கருவியாக கப்பல் சாத்திரம் நூல் குறிப்பிடுவது

(A) சமுக்கு
(B) எரா
(C) பருமல்
(D) கூம்பு
(E) விடை தெரியவில்லை

54. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தார்

(B) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தான்

(C) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தது

(D) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்

(E) விடை தெரியவில்லை

55. சொல்லையும் பொருளையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | வண்மை | 1. | உடல் |
| (b) | மேதை | 2. | அறிவுநுட்பம் |
| (c) | புரை | 3. | ஈகை |
| (d) | மெய் | 4. | குற்றம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

56. சொல் - பொருள் - பொருத்துக.

(a) முகில் 1. மிகவும்

(b) காலன் 2. கூட்டம்

(c) மெத்த 3. மேகம்

(d) சேகரம் 4. எமன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

57. சொல் - பொருள் - பொருத்துக.

(a) பொலம் 1. மலை

(b) கல் 2. வயல்

(c) மல்லல் 3. அழகு

(d) செறு 4. வளம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

58. சொல் - பொருள் - பொருத்துக.

(a) ஈரம் 1. வெட்கம்

(b) நாணம் 2. திருந்திய சொல்

(c) முழவு 3. இரக்கம்

(d) செஞ்சொல் 4. இசைக்கருவி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

59. பிழை திருத்துதல் (ஒரு-ஓர்) (ஒரு-ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க)

(A) ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஓர் நாள்

(B) ஓர் இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(C) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஓர் நாள்

(D) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(E) விடை தெரியவில்லை

60. பிழை திருத்துதல் (ஒரு-ஓர்)

(ஒரு-ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க)

(A) ஒரு அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

(B) ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

(C) ஓர் அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

(D) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

(E) விடை தெரியவில்லை

61. பிழை திருத்துதல்

சரியான பதிலை தேர்ந்தெடு

(A) ஒரு உலகம்

(B) ஓர் நண்பன்

(C) ஓர் உயிர்

(D) ஒரு உயிர்

(E) விடை தெரியவில்லை

62. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) பொருள் என்னும் சொல்லுக்கு அழகு அணி

(B) பொருள் அணி என்னும் சொல்லுக்கு அழகு

(C) அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள்

(D) அழகு என்பது பொருள் அணி என்னும் சொல்லுக்கு

(E) விடை தெரியவில்லை

63. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) 'விருந்தோம்பல்' முதன்மையானது தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில்

(B) முதன்மையானது 'விருந்தோம்பல்' தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில்

(C) 'விருந்தோம்பல்' பண்பாட்டுக் கூறுகளில் தமிழர்களின் முதன்மையானது

(D) தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் 'விருந்தோம்பல்' முதன்மையானதாகும்

(E) விடை தெரியவில்லை

64. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்

(B) இதனால் இவன்முடிக்கும் இதனை என்றாய்ந்து அவன்கண் அதனை விடல்

(C) இவன்முடிக்கும் இதனை இதனால் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்

(D) அதனை இவன்முடிக்கும் இதனால் என்றாய்ந்து இதனை அவன்கண் விடல்

(E) விடை தெரியவில்லை

65. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) இது பழம் அல்ல இவை பழங்கள் அன்று

(B) இது பழம் அன்று இவைகள் பழங்கள் அல்ல

(C) இது பழம் அன்று இவை பழங்கள் இல்ல

(D) இது பழம் இல்ல இவை பழங்கள் அன்று

(E) விடை தெரியவில்லை

66. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்து எழுதுக

குளவி, குழவி

(A) வாளைமீன், வாழைமரம்

(B) கடலலை, வரவழைத்தல்

(C) ஒரு வகைப்பூச்சி, குழந்தை

(D) பறவை, கடல்

(E) விடை தெரியவில்லை

67. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க

நல்கினாள்

(A) வாங்கினாள்

(B) கொடுத்தாள்

(C) எடுத்தாள்

(D) உடைத்தாள்

(E) விடை தெரியவில்லை

68. பின்வரும் மரபுத் தொடரை இணையான பொருளோடு பொருத்துக

'கண்ணைமூடிக் கொண்டு'

(A) தேடிச் செல்லாமல்

(B) பார்த்துக் கொள்ளாதிருத்தல்

(C) வழியனுப்புதல்

(D) ஆராய்ந்து பாராமல்

(E) விடை தெரியவில்லை

69. கலைச் சொல்லைப் பொருத்து

(a) Myth — 1. அழகியல்

(b) Aesthetics — 2. கலைப் படைப்புகள்

(c) Terminology — 3. தொன்மம்

(d) Artifacts — 4. கலைச் சொல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

70. கலைச் சொற்களை அறிதல்

சரியான இணையைக் கண்டறிக.

(A) Renaissance – அழகியல்

(B) Renaissance – முருகியல்

(C) Renaissance – தொன்மம்

(D) Renaissance – மறுமலர்ச்சி

(E) விடை தெரியவில்லை

71. கலைச் சொற்களை அறிதல்

தவறான இணையை கண்டறிக.

(A) Missile – ஏவுகணை

(B) Saline soil – களர்நிலம்

(C) Combination – புணர்ச்சி

(D) Chicken soup – காய்கறி வடிசாறு

(E) விடை தெரியவில்லை

72. கூற்று, காரணம் — சரியா? தவறா?

கூற்று : செப்பலோசை வெண்பாவிற்குரியது.
திருக்குறளும், நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.

காரணம் : இருவர் உரையாடுவது போன்ற ஓசை செப்பலோசை.

(A) கூற்று-தவறு, காரணம்-சரி

(B) கூற்று-சரி, காரணம்-தவறு

(C) கூற்று-சரி, காரணம்-சரி

(D) கூற்று-தவறு, காரணம்-தவறு

(E) விடை தெரியவில்லை

73. கூற்று, காரணம் — சரியா? தவறா?

கூற்று : ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

காரணம் : 'மீ' என்னும் ஓரெழுத்து ஒருமொழி மேகம் என்று பொருள் தரும்.

(A) கூற்று-தவறு, காரணம்-சரி

(B) கூற்று-சரி, காரணம்-தவறு

(C) கூற்று-சரி, காரணம்-சரி

(D) கூற்று-தவறு, காரணம்-தவறு

(E) விடை தெரியவில்லை

74. கூற்று, காரணம் — சரியா? தவறா?

கூற்று : சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர்.

காரணம் : பகுபத உறுப்புகள் ஐந்து வகைப்படும்.

(A) கூற்று-சரி, காரணம்-சரி

(B) கூற்று-சரி, காரணம்-தவறு

(C) கூற்று-தவறு, காரணம்-சரி

(D) கூற்று-தவறு, காரணம்-தவறு

(E) விடை தெரியவில்லை

75. குறில் நெடில் மாற்றம் அறிந்து, பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக.

சுடு-சூடு

(A) சுடுதல் - தீக்காயம்

(B) மெய் - உண்மை

(C) நன்மை - தீமை

(D) பறவை - வானம்

(E) விடை தெரியவில்லை

76. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு தருக.

(தொடு - தோடு)

(A) ஓவியம் - வண்ணம்

(B) மணல் - குன்று

(C) தொடுதல், மாறுதல்

(D) தொட்டுப் பார்த்தல், அணிகலன்

(E) விடை தெரியவில்லை

77. இரு பொருள் தருக.

அணி

(A) பாடல், அணிந்து கொள்

(B) கோ, அமைச்சர்

(C) அழகு, அணிகலன்

(D) இசை, அணிகலன்

(E) விடை தெரியவில்லை

78. இரு பொருள் தருக

திங்கள்

(A) மாதம், சந்திரன்

(B) சூரியன், ஞாயிறு

(C) கிழமை, பசு

(D) மேன்மை, பெருமை

(E) விடை தெரியவில்லை

79. இரு பொருள் தருக

தாரணி

(A) அமைதி, சிறப்பு

(B) கருணை, உலகம்

(C) வையம், உலகம்

(D) சிறப்பு, உலகம்

(E) விடை தெரியவில்லை

80. பொருத்தமான காலம் அமைத்தல் :

அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றவர்.

(A) எதிர்காலம்

(B) நிகழ்காலம்

(C) வசந்தகாலம்

(D) இறந்தகாலம்

(E) விடை தெரியவில்லை

81. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க

(கொதி)

(A) சோறு ———— வந்தது

(B) ஏரி ———— நிரம்பியது

(C) வானில் ———— இடித்தது

(D) கடலில் ———— அடித்தது

(E) விடை தெரியவில்லை

82. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு :
எலி வளை ———— தனி வளை வேண்டும்.

(A) ஆகையால்

(B) அதனால்

(C) ஆனாலும்

(D) அதுபோல

(E) விடை தெரியவில்லை

83. சரியான இணைப்புச் சொல்லைக் கண்டறிக :
நீ படிக்கலன்னா ஊர்ல யாரும் மதிக்கமாட்டாங்க. ———— நீ பள்ளிக்கூடம் போயி நல்லாப் படிச்சுக்க.

(A) ஏனெனில்

(B) அதனால்

(C) அதுபோல

(D) இதுபோல

(E) விடை தெரியவில்லை

84. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக :
அதிக அளவில் மரங்களை வளர்ப்போம் ———— மரங்கள்தான் மழைக்கு அடிப்படை

(A) ஆகையால்

(B) அதனால்

(C) ஏனெனில்

(D) மேலும்

(E) விடை தெரியவில்லை

85. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

———— சொற்களைப் பேச வேண்டும்?

(A) என்ன
(B) எப்படி
(C) எதற்கு
(D) யாது
(E) விடை தெரியவில்லை

86. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :
கண்டிப்பாக வழிவிட வேண்டிய வாகனங்கள் ————?

(A) யாவை?
(B) எது?
(C) யாது?
(D) என்ன?
(E) விடை தெரியவில்லை

87. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :
மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது ————.

(A) எவை?
(B) என்ன?
(C) யார்?
(D) யாது?
(E) விடை தெரியவில்லை

88. பொருத்தமான காலம் அமைத்தல் :
சரியான காலத்தைத் தேர்ந்தெடு :

(A) அங்கு வருவீர்கள் (எதிர்காலம்)
(B) அங்கு வந்தீர்கள் (எதிர்காலம்)
(C) அங்கு வருவீர்கள் (இறந்த காலம்)
(D) அங்கு வருவீர்கள் (நிகழ்காலம்)
(E) விடை தெரியவில்லை

89. பொருத்தமான காலம் அமைத்தல் பார்த்திபனும் பாரதியும் பள்ளியை அடைந்தனர்.

(A) நிகழ்காலம்
(B) இறந்தகாலம்
(C) எதிர்காலம்
(D) வருங்காலம்
(E) விடை தெரியவில்லை

90. பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைக் கண்டறிக :

(A) உழவர்கள் வயலில் இறங்குறாங்க
(B) உழவர்கள் வயலில் இறங்கறாங்க
(C) உழவர்கள் வயலில் இறங்கினார்கள்
(D) உழவர்கள் வயலில் இறக்கிட்டாங்க
(E) விடை தெரியவில்லை

91. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் :
பாரதிதாசனின் சிறந்த படைப்பு குடும்ப ————.

(A) மணி
(B) விளக்கு
(C) மேகலை
(D) பொன்
(E) விடை தெரியவில்லை

92. பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைக் கண்டறிக :

(A) சரியாகச் சொன்னாய்
(B) ரைட்டா சொன்ன
(C) சரியா சொன்ன
(D) செரியா சொன்ன
(E) விடை தெரியவில்லை

93. பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு

சரியானதைக் கண்டறிக :

(A) அவன் தலையணையில் படுத்தான்

(B) அவன் தலகாணியில் படுத்தான்

(C) அவன் தலவாணியில் படுத்தான்

(D) அவன் தலகாயில் படுத்தான்

(E) விடை தெரியவில்லை

94. பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு கண்டறிக.

சரியானதைக் கண்டறிக :

(A) வெளக்கு – துலக்கு

(B) வெளக்கு – விழக்கு

(C) வெளக்கு – விலக்கு

(D) வெளக்கு – விளக்கு

(E) விடை தெரியவில்லை

95. சரியான நிறுத்தற்குறிகளை உடைய விடையைக் கண்டறிக :

(A) "இப்படியும் நடக்குமா என்ன?"

(B) இப்படியும்! நடக்குமா என்ன?

(C) இப்படியும் நடக்குமா? என்ன?

(D) "இப்படியும் ! நடக்குமா? என்ன?

(E) விடை தெரியவில்லை

96. சரியான நிறுத்தற்குறிகளை உடைய விடையைக் கண்டறிக :

(A) 'யார் நீ?' எனக் கேட்டான் கணியன்.

(B) யார் நீ? எனக் கேட்டான் கணியன்.

(C) யார்? நீ! எனக் கேட்டான் கணியன்

(D) 'யார்? நீ? எனக் கேட்டான்' கணியன்

(E) விடை தெரியவில்லை

97. நிறுத்தற்குறிகளை அறிதல் :

தம்பி கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா?

(A) தம்பி, கொஞ்சம் ! குடிக்கத் தண்ணிர் கிடைக்குமா?

(B) "தம்பி, கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா?"

(C) தம்பி ! கொஞ்சம், குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?

(D) தம்பி ; கொஞ்சம், குடிக்கத் தண்ணீர் ! கிடைக்குமா?

(E) விடை தெரியவில்லை

98. ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக.

மயிலாப்பூர்

(A) மாயிலை

(B) மாவிலை

(C) மயிலை

(D) மயீலை

(E) விடை தெரியவில்லை

99. ஊர்ப்பெயர் மரூஉவைக் கண்டறிக : மன்னார்குடி

(A) குடந்தை

(B) மன்னை

(C) சைதை

(D) நெல்லை

(E) விடை தெரியவில்லை

100. ஊர்ப்பெயர் மரூஉவைக் கண்டறிக : நாகப்பட்டினம்

(A) உதகை

(B) கோவை

(C) நாகை

(D) மன்னை

(E) விடை தெரியவில்லை